**Media:** Tamil Murasu
**Date:** 14 June 2022
**Page:** 3

# சமூகப் பராமரிப்புத் துறைக்கு $18 மில்லியன்

## *மின்னிலக்கமயமாதல் முயற்சிகளை வேகப்படுத்த புதிய திட்டம்*



‘டெக்சி’ எனும் இயந்திர மனிதனுடன் பிரைட் ஹில் எவர்கிரீன் ஹோம் இல்லவாசிகள் உரையாடுகின்றனர். **படம்: பிரைட் ஹில் எவர்கிரீன் ஹோம்**

மின்னிலக்கமயமாதல் முயற்சிகளை வேகப்படுத்த, சிங்கப்பூரின் சமூகப் பராமரிப்புத் துறைக்கு $18 மில்லியன் ஒதுக்கப்படும். ‘சமூகப் பராமரிப்பு மின்னிலக்க உருமாற்றத் திட்டம்’ என்று அழைக்கப்படும் புதிய திட்டத்தின் மூலம் இது சாத்தியமாகிறது.

ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பின் (ஏஜசி) வருடாந்திர பணித்திட்டக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய சுகாதார அமைச்சர் ஓங் யி காங், நேற்று இதனை அறிவித்தார்.

மின்னிலக்கமயமாதல் அளவை உயர்த்துவதையும் சமூகப் பராமரிப்பு அமைப்புகளில் உற்பத்தித்திறன் மற்றும் வேலை திருப்தியை மேம்படுத்துவதையும் இத்திட்டம் இலக்கு கொண்டுள்ளது.

மின்னிலக்கத் தொழில்நுட்பங்களின் அறிமுகம், மின்னிலக்க ஆற்றலை மேம்படுத்துவது உள்ளிட்டவை இத்தகைய முயற்சிகளில் அடங்கும் என்று ஏஜசி நேற்று வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

இந்த உருமாற்றத் திட்டம், சமூகப் பராமரிப்பு அமைப்புகளுக்கு செலவு கட்டுப்படியான, விரிவான மின்னிலக்கத் தீர்வுகளையும் வழங்குகிறது.

தொழில்நுட்பப் பயன்பாட்டில் தங்களுக்கு வழிகாட்ட ஆலோசனைச் சேவைகளையும் ஊழியர்களுக்கான பலதரப்பட்ட பயிற்சித் திட்டங்களையும் அமைப்புகள் நாடலாம் என்றும் ஏஜசி கூறியது.

“கூடுதலான சமூகப் பராமரிப்பு அமைப்புகள் தங்கள் மின்னிலக்கமயமாதல் முயற்சிகளை மேம்படுத்த உதவ, ஏஜசியும் சுகாதார அமைச்சும் சமூகப் பராமரிப்புத் துறைக்குக் கூடுதல் ஆதரவை ஒருங்கிணைக்கும்,” என்று செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், வேலை மறுவடிவமைப்பு முன்னோடித் திட்டத்தின்கீழ் திறனாளர்களை உருவாக்கவும் அவர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும் சமூகப் பராமரிப்பு அமைப்புகளுக்கு ஏஜசி தொடர்ந்து ஆதரவளிக்கும்.

ஏஜசி மற்றும் சுகாதார அமைச்சால் தொடங்கப்பட்ட வேலை மறுவடிவமைப்புத் திட்டம், பலதரப்பட்ட திறன்களை ஒன்றுசேர்க்கும் பணிகளை உருவாக்க நோக்கம் கொண்டுள்ளது.

இந்த முன்னோடித் திட்டத்தின் முதல் கட்டம், வெவ்வேறு பராமரிப்புச் சூழல்களைக் கொண்ட நான்கு அமைப்புகளில் கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை நடத்தப்பட்டது. மறுவடிவமைக்கப்பட்ட பணிகளைச் சோதித்துப் பார்ப்பதில் 43 ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் அடுத்த மாதம் தொடங்கும். அதில் கூடுதலாக எட்டு சமூகப் பராமரிப்பு அமைப்புகள் சேரும்.

ஏஜசியின் கற்றல் நிலையங்களும் பயிற்சி ஆற்றலை அதிகப்படுத்தும். 2018லிருந்து பயிற்சி இடங்களின் எண்ணிக்கை இருமடங்கு அதிகரித்துள்ளது. ஒவ்வோர் ஆண்டும் 18,000க்கும் அதிகமான பயிற்சி இடங்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக ஏஜசி தெரிவித்தது.

Source: Tamil Murasu @SPH Media Limited. Permission required for reproduction.